(ஒன்பதாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

இல. 2(2).]

# பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2022 யூன் 22 புதன்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2022 யூலை 04, திங்கட்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளைகள் (இல. 1),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பாக வர்த்தக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 மார்ச் 10 ஆம் திகதிய 2270/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பாக சனாதிபதியினால் விதிக்கப்பட்டு, 2022 மே 18 ஆம் திகதிய 2280/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் விசேட வர்த்தகப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2022 மார்ச் 03 ஆம் திகதிய 2269/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2022 மார்ச் 03 ஆம் திகதிய 2269/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2022 மார்ச் 09 ஆம் திகதிய 2270/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2022 மார்ச் 28 ஆம் திகதிய 2273/01 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 5),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2022 ஏப்ரல் 13 ஆம் திகதிய 2275/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 6),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் விதிக்கப்பட்டு 2022 மே 18 ஆம் திகதிய 2280/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வை வரி தொடர்பில் 2022.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2022 மார்ச் 09 ஆம் திகதிய 2270/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை.)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 மே 31 ஆம் திகதிய 2282/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.06.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 மே 31 ஆம் திகதிய 2282/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.06.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்,— அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2022 யூன் 20 ஆம் திகதிய 2285/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மற்றும் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.06.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— சிவில் விமான சேவைகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சிவில் விமான சேவைகள் சட்டத்தின் 66 மற்றும் 69 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 117 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் குடியியல் வான்செலவு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூலை 03 ஆம் திகதிய 2078/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மற்றும் அவ் வர்த்தமானப் பத்திரிகையின் அச்சுப் பிழைகள் திருத்தப்பட்டு, 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சிவில் விமான சேவைகள் சட்டத்தின் 66 மற்றும் 69 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 117 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 யூன் 06 ஆம் திகதிய 2283/05 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2022 யூலை 19, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2649/2022

கௌரவ ரஊப் ஹகீம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கப் பாடசாலைகளில் நிலவும் பௌத்தம், இந்து, கத்தோலிக்கம் மற்றும் இஸ்லாம் ஆகிய சமய பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு, 2019.05.25 ஆம் திகதி நடத்தப்பட்ட தர்மாசிரியர் பரீட்சையில் சித்தி பெற்ற அபேட்சகர்களை இலங்கை ஆசிரியர் சேவையின் 3-II ஆம் தரத்திற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கு கொள்கை ரீதியான தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதனை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆசிரியர் நியமனங்களை வழங்க உத்தேசித்துள்ள திகதி யாது என்பதையும்;

(iii) 2019 ஆம் ஆண்டு தர்மாசிரியர் பரீட்சைக்குத் தோற்றிய அபேட்சகர்களுக்கு உரிய கால எல்லைக்குள் நியமனம் வழங்காததன் காரணமாக அரச சேவைக்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் உச்ச வயதெல்லை கடக்கப்படுவதனால் இவர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்படுகின்றது என்பதனை அறிவாரா என்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமையுடைய அபேட்சகர்களுக்கு தாமதமின்றி நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2654/2022

கௌரவ மயந்த திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) “சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு இலட்சம் வேலைவாய்ப்புகளை வழங்கும் வேலைத்திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்படுவதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி வேலை வாய்ப்புகள் வழங்கப்படுகையில் பின்பற்றப்பட்ட நடவடிக்கைமுறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் இதுவரை வழங்கப்பட்டுள்ள வேலை வாய்ப்புக்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) மேற்படி தொழில்களுக்கான கடமையின் தன்மை யாதென்பதையும்;

(v) மேற்படி தொழில்பெறுநர்கள் இணைக்கப்பட்டுள்ள தொழில் நிலையங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2689/2022

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அப்போதைய உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட "நில செவன" எனும் கருத்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் குருநாகல் மாவட்டத்தில் "நில செவன" அலுவலகங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளும், பிரதேச செயலகப் பிரிவுகளும் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு "நில செவன" அலுவலகங்களின் நிர்மாணப் பணிகளுக்காக செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மேற்குறித்த கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி "நில செவன"அலுவலகங்களும் நிர்மாணிக்கப்பட்ட ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவும், பிரதேச செயலகப் பிரிவும் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு "நில செவன" அலுவலகங்களின் நிர்மாணப் பணிகளுக்காக செலவிட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2750/2022

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாணத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையின் 7 பஸ் டிப்போக்கள் நிறுவப்பட்டுள்ள போதிலும், மேற்படி டிப்போக்களில் காணப்படும் பேரூந்துகளின் பற்றாக்குறை மற்றும் ஆளணியில் நிலவும் வெற்றிடங்கள் காரணமாக மாகாண மக்களுக்கு உரிய சேவையை வழங்க இயலாதுள்ளதென்பதையும்;

(ii) இதன் காரணமாக அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு உரிய நேரத்தில் உரிய நிறுவனங்களுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதென்பதையும்;

(iii) குறிப்பிட்ட சில இடங்களுக்கு போக்குவரத்துச் சேவைகள் இல்லாததால் அதிக செலவில் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டியுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், எதிர்வரும் காலத்தில் வடமாகாண மக்களுக்கு தரமான போக்குவரத்துச் சேவையை வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2771/2022

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பின் (சார்க்-SAARC) கொழும்பு சமவாயம் மற்றும் 16 ஆவது மாநாட்டு அமர்வின் பிரகாரம் 8000 மெ.தொ. விசேட அரிசி இருப்பு ஒன்றும் 2008 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 100,000 மெ.தொ. அரிசி காப்பு இருப்பு ஒன்றும் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் களஞ்சியங்களில் பேணவரப்பட வேண்டியது அத் திணைக்களத்தின் பிரதான பணியொன்றாக அடையாளங் காணப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு அரிசி இருப்புக்கமைய பேணிவரப்பட்ட அரிசிக் கையிருப்பின் அளவு ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட இருப்புக்களில் பேணிவரப்பட வேண்டிய அரிசிக் கையிருப்புகள் உரியவாறு பேணப்பட்டனவா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட இருப்புகளுக்கென உரியவாறு அரிசிக் கையிருப்புகள் பேணப்படாத காரணத்தினால் மேற்படி இருப்புகளை உருவாக்கியதன் நோக்கங்கள் நிறைவேறவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2785/2022

கௌரவ சிவஞானம் ஸ்ரீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாணத்தின் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் அரச பாடசாலைகளில் ஆசிரிய உதவியாளர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள தொண்டர் ஆசிரியர்களாக பணியாற்றியவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நியமனங்கள் எவ்வடிப்படையில் வழங்கப்பட்டதென்பதையும்;

(iii) மேற்படி நியமனங்கள் வழங்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி ஆசிரிய உதவியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ள சம்பள அளவுத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட ஆசிரிய உதவியாளர்கள் ஆசிரியர் சேவையின் 3(I) ஆம் தரத்தின் (ஆ) பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) ஆசிரிய உதவியாளர் நியமனங்கள் வழங்குகையில் தொண்டர் ஆசிரியர்களாக 2013.07.01 ஆந் திகதி தொடக்கம் 2018.08.01 ஆந் திகதி வரை சேவையாற்றிய காலப்பகுதி இவர்களின் சேவைக்காலத்துக்கு சேர்க்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) ஆசிரியர் உதவியாளர் நியமனம் வழங்கப்பட்ட திகதியினை இவர்களின் ஆசிரியர் சேவையின் ஆரம்ப நியமனத் திகதியாக கருதுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2839/2022

கௌரவ சாணக்கியன் இராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேச செயலகத்துக்கென கணக்காளரொருவர் நியமிக்கப்பட்டுள்ளாரா என்பதையும்;

(ii) மேற்படி பிரதேச செயலகத்துக்கு கணக்காளரொருவரை நியமிப்பதில் தாமதம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்பற்று, களுவாஞ்சிக்குடி மற்றும் போரதீவுபற்று ஆகிய மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளினதும் சனத்தொகை அதிகமென்பதால் மேற்படி ஒவ்வொரு பிரிவையும் இரண்டு பிரிவுகளாகப் பிரிப்பதற்கு இன்றளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) இது தொடர்பாக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2973/2022

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்குவதற்கு நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்திற்கு நாளொன்றுக்குத் தேவையான நிலக்கரியின் அளவு யாது என்பதையும்;

(ii) தற்போது நிலவும் அந்நியச் செலாவணி நெருக்கடி நிலை காரணமாக நிலக்கரி வழங்குவதற்கு விலைமனுதாரர்கள் முன்வருவதில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) இதன் காரணமாக நிலக்கரிக்கான உடனடி கொள்வனவை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3055/2022

கௌரவ அஜித் மான்னப்பெரும,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சேதனப் பசளையை பிரபல்யப்படுத்தும் வேலைத்திட்டம் காரணமாக 2022 ஆம் ஆண்டின் பெரும்போகத்தில் நெல் அறுவடையானது பாரியளவில் குறைவடைந்துள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) அதற்காக நட்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், இன்றளவில் வழங்கப்பட்டுள்ள நட்டஈட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) ஒவ்வொரு மாவட்ட வாரியாக இது வரையில் நட்டஈடு வழங்கப்பட்டுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(v) நட்டஈடு வழங்குகையில் பின்பற்றப்படும் வழிமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3079/2022

கௌரவ அசோக்க பிரியந்த,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாண சுகாதார அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் காணப்படுகின்ற புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலையிலும் நிலவுகின்ற வெற்றிடங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) மேற்படி வெற்றிடங்களை நிரப்பி புத்தளம் மாவட்டத்தின் ஆயுர்வேத வைத்தியசாலைக் கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2022 யூலை 20, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

8/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்காக புதிய சட்டங்களை விதிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) நீதி அமைச்சர் இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடலொன்றை சிங்கப்பூர் அரசாங்கத்துடன் நடத்தியுள்ளார் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) சமூக ஊடகங்கள் பற்றிய அரசாங்கத்தின் நிலைப்பாடு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

37/2022

கௌரவ புத்திக பத்திரண,— விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கெரம் விளையாட்டினை மேம்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பணத் தொகையில் அரச பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பணத் தொகையில் பாடசாலையை விட்டு விலகிய சிறுவர்களின் கெரம் விளையாட்டுத் திறனை மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கெரம் விளையாட்டில் சர்வதேச மட்டத்திலான வெற்றிகளை அடைந்துகொள்ளும் பொருட்டு பாடசாலை விளையாட்டு வீரர்களை நெறிப்படுத்துவதற்கான திட்டங்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தேசிய கெரம் சங்கத்தினதும் அதனுடன் இணைந்துள்ள ஏனைய சங்கங்களினதும் நிர்வாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அரசாங்கம் தொடர்புபடுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதில் எவ்வாறு தொடர்புபடுகின்றது என்பதையும்;

அவர் மேலும், இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

253/2022

கௌரவ ஹேஷா விதானகே,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையின் முட்டை உற்பத்தியின் அளவு ஒவ்வொரு ஆண்டிலும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியினுள் முட்டை ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பின், அது தொடர்பான விபரங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்குறித்த காலப்பகுதியினுள் முட்டை இறக்குமதி செய்யப்பட்டிருப்பின், அது தொடர்பான விபரங்கள் யாவையென்பதையும்;

(iv) இலங்கையின் முட்டை உற்பத்தியை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

573/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கோழிக் குஞ்சுகளைப் பெறுவதற்காக 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள தாய்க்கோழிகளின் எண்ணிக்கை;

(ii) அத்தகைய தாய்க்கோழிகளை இறக்குமதி செய்வதற்கென செலவிடப்பட்டுள்ள தொகை;

ஒவ்வோர் ஆண்டு வாரியாக தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தாய்க்கோழிகளை இறக்குமதிசெய்தல் தொடர்பாக ஏதேனும் மட்டுப்பாட்டை விதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதில் தாக்கம் செலுத்திய காரணிகள் யாவை என்பதையும்;

(iii) அத்தகைய மட்டுப்பாடானது, நாட்டில் முட்டை விலையிலும் கோழி இறைச்சி விலையிலும் ஏற்படுத்தும் தாக்கம் யாது என்பதையும்;

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1031/2022

கௌரவ சாந்த பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அகில இலங்கை பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் வருடாந்தம் நடாத்தப்படுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) 2020 ஆம் ஆண்டில் மாகாண பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) 2020 ஆம் ஆண்டில் அகில இலங்கை பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) இன்றேல், மேற்படி போட்டிகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1185/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வரையறுக்கப்பட்ட ஹேவாகம் கோரளை ஹங்வெல்ல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பாரிய நிதி மோசடி இடம்பெற்றுள்ளது என்பதையும்;

(ii) பிரதேசத்தின் விஹாரைகள் மற்றும் பொது மக்களின் நிதி மேற்படி கூட்டுறவுச் சங்கத்துடன் இணைந்த கிராமிய வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) மேற்படி வைப்பாளர்களுக்கு எந்தவொரு நிதியையும் மீளப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி சங்கத்தினால் மோசடி செய்யப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) தமது நிதியைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ள வைப்பாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி மோசடி எவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை விளக்க முடியுமா என்பதையும்;

(iv) மேற்படி மோசடிக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் இனங்காணப் பட்டிருப்பின் அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இந்த நிதி மோசடிக்கு மேற்படி சங்கத்தின் அப்போதைய பணிப்பாளர் சபை, கூட்டுறவுத் திணைக்கள அலுவலர்கள் மற்றும் தனியார் கம்பனியொன்று பொறுப்புக்கூற வேண்டும் என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பின் அவை யாவை என்பதையும்;

(iii) அவர்களிடமிருந்து நிதியை அறவிட்டு வைப்பாளர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3087/2022

கௌரவ தவராஜா கலை அரசன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை கல்வி வலயத்தின் உவெஸ்லி உயர்தரப் பாடசாலையின் தொழில்நுட்ப பீடத்திற்கு கல்வி அமைச்சின் தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளரின் 2020.06.25 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் வழங்கப்பட்ட அனுமதியின் பேரில் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன என்பதையும்;

(ii) மேற்படி கட்டிட நிர்மாணத்திற்காக அப்பாடசாலையின் கணினி அலகு மற்றும் 5 வகுப்பறைகளைக் கொண்ட சுமார் 60 வருடங்கள் பழமைவாய்ந்த கட்டிடம் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளரின் அனுமதி மற்றும் வலயக் கல்வி அலுவலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் ஆலோசனையின் கீழ் அகற்றப்பட்டது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி தொழில்நுட்ப பீடத்தின் நிர்மாணப் பணிகள் தற்போது நிறுத்தப்பட்டிருப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) அதன் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3176/2022

கௌரவ திலிப் வெதஆரச்சி,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையில் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட சமுதாய நீர் வழங்கல் திட்டங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றுள் இன்றளவில் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள திட்டங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட சமுதாய நீர் வழங்கல் திட்டங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளின் அடிப்படையில் எத்தனை என்பதையும்;

(ii) அவற்றுள் இன்றளவில் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள மற்றும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ள திட்டங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3294/2022

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு அரசாங்க வேலைவாய்ப்புகளுக்காக பட்டதாரி பயிலுநர்களை உள்ளீர்ப்புச் செய்கையில் உள்வாரி மற்றும் வெளிவாரி பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன என்பதனை அறிவாரா என்பதையும்;

(ii) பட்டதாரிகளை பயிலுநர்களாக உள்ளீர்ப்புச் செய்கையில் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற பட்டதாரிகள் உள்ளீர்ப்புச் செய்யப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iii) அரசாங்க வேலைவாய்ப்புகளுக்காக விண்ணப்பங்களைக் கோருகின்ற போது அதுதொடர்பில் வலியுறுத்தப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iv) பயிலுநர்களாக உள்ளீர்ப்புச் செய்யப்படாத வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் தீர்வு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3338/2022

கௌரவ அலி சப்ரி ரஹீம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் நகரில் ஆதார வைத்தியசாலையொன்று அமைக்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலைக்காக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) இன்றளவில் அங்கு பணியாற்றும் மருத்துவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) தற்போது அங்கு நிலவும் மருத்துவர்களின் பற்றாக்குறை தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி வைத்தியசாலையின் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வது தொடர்பில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையை மத்திய அரசாங்கத்திற்குப் பொறுப்பேற்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) அது தொடர்பில் இது வரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2022 யூலை 21, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1198/2022

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெதுரு ஓயா நீர்த்தேக்கக் கருத்திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவினம் மற்றும் இறுதிச் செலவினம் என்பன தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) தற்போது மேற்படி கருத்திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இக்கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டமைக்கான நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iv) இன்றளவில் இந்நோக்கங்கள் நிறைவேறியுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தெதுரு ஓயா நீர்த்தேக்கத்தின் வலதுகரை கால்வாய் மற்றும் இடதுகரை கால்வாய் என்பவற்றின் ஊடாக திறந்துவிடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள நீரின் உச்சளவு தனித்தனியே யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தினை நிறைவு செய்த பின்னர் திட்டமிடப்பட்டவாறு இடதுகரை கால்வாயிலிருந்தும் வலதுகரை கால்வாயிலிருந்தும் நீர் திறந்துவிடப்படுமா என்பதையும்;

(iii) வலதுகரை மற்றும் இடதுகரை என்பவற்றுக்கான கட்டமைப்புகள் முறையான அத்திவாரமோ அல்லது முறையான இணைப்புகளோ இன்றி நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் எதிர்ப்பார்க்கப்படும் பயன்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்காக காணிகளைச் சுவீகரிப்பதற்கும் நீரில் மூழ்கும் காணிகளுக்கு இழப்பீடுகளைச் செலுத்துவதற்கும் உறப்பட்ட செலவினம் தனித்தனியே யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1322/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020.12.31 ஆம் திகதியளவில் ஓய்வூதியம் பெற்றுக்கொண்டிருந்த அரச ஓய்வூதியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2015 முதல் 2019 வரை ஒவ்வொரு வருடமும் அவர்களுக்கு ஓய்வூதியம் செலுத்துவதற்காக செலவிடப்பட்ட தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) 2015 முதல் 2019 வரை ஒவ்வொரு வருடமும் புதிதாக இணைந்துகொண்ட ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1472/2022

கௌரவ ரோஹண பண்டார,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் 2021 ஆம் ஆண்டின் சிறுபோகத்தின்போது நெற் செய்கை மேற்கொள்ளப்பட்ட வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(ii) அவற்றுள் சேதனப் பசளை பயன்படுத்தப்பட்டு நெற் செய்கை மேற்கொள்ளப்பட்ட வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) சேதனப் பசளையைப் பயன்படுத்தி நெற் செய்கையை மேற்கொண்ட விவசாயிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் யாவையென்பதையும்;

(iv) அநுராதபுரம் மாவட்டத்தில் சேதனப் பசளை மூலம் மேற்கொள்ளப்படும் நெற் செய்கையை பிரபல்யப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1731/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தனியார் துறையில் சேவையாற்றும் ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதை 60 ஆக உயர்த்த தீர்மானிப்பதற்கு ஏதுவான காரணிகள் யாவையென்பதையும்;

(ii) ஓய்வு பெறும் வயது 60 ஆக உயர்த்தப்படுவதன் காரணமாக 55 வயது பூர்த்தியடையும்போது, ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வதற்கான உரித்து இழக்கப்படுகின்றது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அது தொடர்பில் அமைச்சினால் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1946/2022

கௌரவ லலித் எல்லாவல,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் திரு. ரோஹண விஜேவீர அவர்களை 1989.11.12 ஆம் திகதி அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கம் கைது செய்து அது தொடர்பாக ஊடகங்களின் மூலம் வெளிப்படுத்தியது என்பதையும்;

(ii) 1989.11.13 ஆம் திகதி அவர் உயிரிழந்துள்ளார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) திரு. ரோஹண விஜேவீர அவர்களின் மரணம் இயற்கை மரணமா என்பதையும்;

(ii) இன்றேல், அது ஒரு படுகொலையா என்பதையும்;

(iii) படுகொலை எனின், அது தொடர்பில் இலங்கையின் நீதிமன்றமொன்றினால் வழங்கப்பட்டுள்ள வழக்குத் தீர்ப்பொன்று உள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி மரணம் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் ஒருவர் அல்லது தலைவர் ஒருவர் சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1950/2022

கௌரவ வசந்த யாப்பா பண்டார,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகாவலி கங்கையை அண்டியதாக கன்னோருவ, வராதென்ன பிரதேசத்தில் "ஹத்கிந்த" என்றபெயரில் சுமார் 59 ஹெக்டெயார் பரப்பளவுகொண்ட இயற்கையான ஒரு தீவுக்கூட்டம் காணப்படுகிறது என்பதையும்;

(ii) அந்தச் சூழல் தொகுதியின் தனிச்சிறப்பான உயிர் பல்வகைமை காரணமாக இலங்கை மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமாகவிருந்த அப்பிரதேசமானது, 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்திற்கமைய 2017.06.13 ஆம் திகதி "வராத்த ஹத்கிந்த சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசம்" எனப் பெயரிடப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் அங்கு அனுமதியற்ற கட்டிடங்களை அமைக்க வேண்டாமெனத் தெரிவித்து அறிவித்தல்கள் காட்சிபடுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

(iv) மேற்படி சூழல் தொகுதி அழிந்துபோகும் வகையில் தனியார் ஹோட்டல்களை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும்;

(v) கண்டி நகரசபையின் எல்லையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அனுமதியற்ற கட்டிடங்கள், மகாவலி கங்கை மாசடைவதற்கு ஏதுவாக உள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கன்னோருவ தொடக்கம் புதிய தொடம்வல பாலம் வரை நிர்மாணிக்கப்பட்டுள்ள அனுமதியற்ற கட்டிடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி சூழல் தொகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அனுமதியற்ற கட்டிடங்களை அகற்ற இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1962/2022

கௌரவ காமினி வலேபொட,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் தேசிய ஒருமைப்பாடு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள்;

வெவ்வேறாக யாவை என்பதை அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1994/2022

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தின் ஆட்சி காலப்பகுதியில், கல்வி அமைச்சினால் பாடசாலை சீருடைகளுக்குப் பதிலாக கூப்பன் அட்டைகள் விநியோகிக்கப்பட்டதை அறிவாரா என்பதையும்;

(ii) அதன் மூலம் அரசாங்கத்தின் பணம் தவறாக கையாளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அந்தத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) அதற்குப் பொறுப்புக்கூறவேண்டிய தரப்பினர் யாவர் என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கூப்பன் அட்டைகளில் அப்போதைய கல்வி அமைச்சரின் நிழற்படம் உட்பட நான்கு நிழற்படங்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததை அறிவாரா என்பதையும்;

(ii) அந்தக் கூப்பன் அட்டைகளில் அப்போதைய சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சரின் நிழற்படங்களை உள்ளடக்க அவர்களின் உடன்பாடு கிடைத்திருந்ததா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) அந்த நிழற்படங்களை உள்ளடக்க செலவிடப்பட்டிருந்த மேலதிக தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) (i) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் அரசாங்கப் பாடசாலைகளின் பாடப் புத்தகங்களில், அப்போதைய கல்வி அமைச்சரின் வர்ண நிழற்படமொன்று உள்ளடக்கப்பட்டிருந்ததை அறிவாரா என்பதையும்;

(ii) அதற்கென அரசாங்கத்தின் பணம் பயன்படுத்தப்பட்டிருந்ததை அறிவாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அதற்கென செலவிடப்பட்டுள்ள மொத்தத்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2007/2022

கௌரவ (கலாநிதி) (மேஜர்) பிரதீப் உந்துகொட,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவகத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டத்திற்கு முரணான செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விடயம் காரணமாக அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களை இனங்காண்பதற்காக புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி புலனாய்வுகளின் மூலம் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் இனங்காணப்பட்டிருப்பின், அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அலுவலர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) அவர்களுக்கெதிராக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) எதிர்வரும் காலங்களில் இடம்பெறக்கூடிய இத்தகைய முறைகேடுகள், முறையற்ற நியமனங்கள், ஊழல் செயற்பாடுகள் அல்லது சட்டத்திற்கு முரணான செயற்பாடுகளைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2015/2022

கௌரவ கே.பீ. எஸ் குமாரசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் வங்கியின் உதவி முகாமையாளர் பதவிக்கு பதவி உயர்வு வழங்குவதற்கு தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை விண்ணப்பங்கள் கோரப்பட்டன என்பதையும்;

(ii) அதன் பிரகாரம் நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் 40 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்டவர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன என்பதையும்;

(iii) ஆயினும், 2015.12.31 ஆம் திகதிக்குப் பின்னர் மக்கள் வங்கியின் உதவி முகாமையாளர் பதவிக்கு பதவி உயர்வு வழங்குவதற்குரிய போட்டிப் பரீட்சைக்கு 2019.06.30 ஆம் திகதியன்றே விண்ணப்பங்கள் கோரப்பட்டன என்பதையும்;

(iv) அதன் பிரகாரம் உரிய பரீட்சை 2019.12.15 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது என்பதையும்;

(v) அப் பரீட்சையின் வெட்டுப்புள்ளி 50 வரை அதிகரிக்கப்பட்டது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட பரீட்சையின் வெட்டுப்புள்ளியை 50 வரை அதிகரித்தமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) முன்னைய பரீட்சைகளுக்கு அமைப்பு ரீதியாக முற்றிலும் மாறுபட்ட வினாத்தாளை வழங்குவதற்கும் அதில் கோட்பாட்டு ரீதியான வினாக்களை உள்ளடக்குவதற்குமான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட பரீட்சையின் முடிவுகளை மீளாய்வு செய்து, அநீதிக்குள்ளான சுமார் 768 மக்கள் வங்கி ஊழியர்களுக்கு நீதி வழங்கப்படுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இனறேல், ஏன்?

# 2022 யூலை 22, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2026/2022

கௌரவ மதுர விதானகே,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சிறுநீரக நிதியத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய ஊழல் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2044/2022

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் மொனராகலை மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(i) அவ்வெண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு வாரியாக தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி காலப்பகுதியில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் மொனராகலை மாவட்டத்தில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்புக் கிராமங்களில் தற்போது நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ள வீடமைப்புக் கிராமங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) இதுவரையில் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படாத வீடமைப்புக் கிராமங்கள் காணப்படின், அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி வீடமைப்புக் கிராமங்களின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் மொனராகலை மாவட்டத்தில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றுள் தற்போது நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ள மற்றும் நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருகின்ற வீடுகளின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2060/2022

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் நெடுஞ்சாலைகள் விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள்;

வெவ்வேறாக யாவை என்பதை அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2072/2022

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டச் செயலகத்தில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2096/2022

கௌரவ எஸ்.எம்.எம். முஸ்ஸாரப்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான டிப்போக்களினதும் உப டிப்போக்களினதும் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு டிப்போவினதும் உப டிப்போவினதும் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அவ்வொவ்வொரு டிப்போவிலும் உப டிப்போவிலும் இன்றளவில் காணப்படுகின்ற பாவனைக்குப் பொருத்தமான நிலையிலுள்ள பேரூந்துகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு டிப்போவிலும் உப டிப்போவிலும் இன்றளவில் காணப்படுகின்ற பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அம்பாறை மாவட்டத்தின் பொத்துவிலில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பிராந்திய உப டிப்போ, 2001 ஆம் ஆண்டில் உப டிப்போவாக்கப்பட்டதோடு மேற்படி டிப்போ இதுவரை உப டிப்போவாகவே உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்,

(ii) மேற்படி உப டிப்போவை பிரதான டிப்போவாக தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்,

(iii) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்,

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2113/2022

கௌரவ இஷாக் ரஹுமான்,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டில் இலங்கையில் யானை-மனித மோதல் காரணமாக மரணமடைந்த நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவ்வாறு மரணமடைகின்ற நபரொருவர் சார்பில் வழங்கப்படுகின்ற நட்ட ஈட்டுத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) யானை-மனித மோதலைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2261/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச சேவைக்கு புதிதாக ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட பயிலுநர் பட்டதாரிகளுக்கு பிரசவ விடுமுறை வழங்காதிருப்பதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இத்தீர்மானம் காரணமாக அவர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட தீர்மானத்தை நீக்குவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2457/2022

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2022 ஆம் ஆண்டில் இதுவரை இலங்கைக்கு வருகை தந்துள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2022 ஆம் ஆண்டில் வருகை தரக்கூடுமென எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் மூலம் 2022 ஆம் ஆண்டில் ஈட்டுவதற்கு எதிர்ப்பார்க்கப்படும் வருமானம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2467/2022

கௌரவ றோஹண திஸாநாயக்க,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட எல்கடுவ பெருந்தோட்டக் கம்பெனியின் வசமுள்ள காணிகளின் மொத்த அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி காணிகளின் அளவானது, அக்கம்பெனிக்குச் சொந்தமான ஒவ்வொரு தோட்ட வாரியாக யாதென்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட கம்பெனி வசமுள்ள காணிகளில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்ற மற்றும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத காணிகளின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத காணிகளில் பயிர்செய்கை மேற்கொள்வதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன் ?

2565/2022

கௌரவ வடிவேல் சுரேஷ்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெருந்தோட்டக் கம்பனிகளினால் இன்றளவில் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற இலங்கையிலுள்ள பெருந்தோட்டங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி தோட்டங்களின் காணி உரித்து அரசாங்கத்திற்குரியதாக உள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், மேற்படி காணிகளின் உரித்து அரசாங்கத்திடமிருந்து அகற்றப்பட்டு முழுமையாக பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு மாற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தோட்டங்களில் வாழ்கின்ற மக்களுக்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொடுக்கின்ற போது உரிய பெருந்தோட்டக் கம்பனிகளிடம் அனுமதி பெற வேண்டுமா என்பதையும்;

(ii) குறிப்பாக, பெருந்தோட்ட வீடுகளுக்கு குடிநீர் வசதிகள் மற்றும் மின்சார வசதிகளைப் பெற்றுக்கொள்கின்றபோதும் வீடமைப்பிற்காக காணிகளைப் பெற்றுக்கொள்கின்றபோதும் உரிய பெருந்தோட்டக் கம்பனிகளிடம் அனுமதி பெற வேண்டுமா என்பதையும்;

(iii) இந்த நிலைமையானது, அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தடையாக அமையுமென்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி நிலைமையினை சீர்செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?